நகர் ஊரமைப்பு துறை (DTCP)

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்

ஆண்டிக்கவுண்டனூர் ஊராட்சி

திருப்பூர் மாவட்டம், உடுமலைபேட்டை வட்டம், ஆண்டிக்கவுண்டனூர் ஊராட்சி மற்றும் கிராமம், நில அளவை எண் **37/1A**-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.



இணையதள விண்ணப்ப எண் : **RGUVU0V8**

அளவு : **1" = 66'** (அ) **(1:800)**

வ

குறிப்பு:-

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு	:	3.66 ஏக்கர் (அ) 14800.00 ச.மீ
ஒதுக்கிய மனைகள்	:	67 (E.W.S. மனைகள் உட்பட)
மனைப்பிரிவின் எல்லை	:	
நிலையிலுள்ள சாலை	:	

பொது ஒதுக்கீடு :

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:-

மனைப்பிரிவு சாலை (ம) மூலை முடுக்கு பரப்பு : 3548.30 ச.மீ :

மனைப்பிரிவு சாலை பரப்பளவு நீங்கலாக மனைகளின் பரப்பளவு = (மனைப்பிரிவின் மொத்த பரப்பு - உத்தேச சாலை பரப்பு)
(14800.00 ச.மீ - 3548.30 ச.மீ)= 11251.70 ச.மீ

பூங்காவிற்கு தேவையான பரப்பளவு:-

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலை **X 10%**
தேவையான பரப்பு = 14800.00 ச.மீ - 3548.30 ச.மீ **X 10% = 1125.17** ச.மீ
ஒப்படைக்கப்பட்ட பூங்கா பரப்பு = 1160.23 ச.மீ (10.31%) :

பொது உபயோகம் (ம) **TANGEDCO**-க்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பரப்பளவு:-

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலை) **X 0.5%**
(14800.00 ச.மீ - 3548.30 ச.மீ) **X 0.5%**
தேவையான பரப்பளவு = **1125.17** ச.மீ **X 0.5% = 56.26** ச.மீ
ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக பரப்பு = 66.42ச.மீ (0.59%) :
ஒப்படைக்கப்பட்ட **TANGEDCO** பரப்பு = 63.35ச.மீ (0.56%) :

மனுதாரர் விற்பனைக்குறியவை:-

E.W.S மனைகள் 20-37 = 18 மனைகளின் பரப்பு = 1204.59 ச.மீ (10.71%)

மூலை முடுக்கு:-

12.0மீ. வரை உள்ள சாலைகளுக்கு 1.50மீ. x 1.50மீ. விடப்படல் வேண்டும்.
12.0மீ.-க்கு மேல் 30.5மீ. வரை உள்ள சாலைகளுக்கு 4.50மீ. x 4.50மீ. விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:-

1. அரசாணை எண் : 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019-ன்படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள், பூங்கா, பொது உபயோக ஒதுக்கீடு உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. (ம) அரசாணை எண் : 16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.01.2020-ன்படி **TANGEDCO** ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சியில் உறுதி செய்துகொள்ளவேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படவேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவுவாயிலில் **120CM X 60CM** அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்படவேண்டும்.
6. குறைந்த வருவாய்க்கான மனைகள் (E.W.S-20-37) ஆகியவற்றினை மனை உட்பிரிவு மற்றும் மனை ஒருங்கிணைப்பு செய்யக்கூடாது.
7. அரசாணை எண் : 181 வீ.வ (ம) ந.வ.து நாள்: 09.12.2020-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி, குடிநீர் வசதிகள் (ம) மின்கம்பங்கள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
8. அரசாணை எண் : 141 வீ.வ (ம) ந.வ.து நாள்: 16.07.2022-ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

SWP/ DTCP/ TIRUPUR/ LAYOUT APPROVAL No: 114 / 2025

இளஞ்செழியன்.இரா.க.
வரைவாளர் நிலை-**III**

பார்வதி.சி
கட்டிட கலை / திட்ட உதவியாளர்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்

Signature valid Signature valid